**பேராதனைப் பல்கலைக்கழகம் - 2017**

-----------------------------------------------------

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5), 108 மற்றும் 111 பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம்தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 111 இன் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

**2.1 முனைப்பழியான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

கணக்கீட்டு நியமத்தின் 48 ஆம் பந்தி பிரகாரம், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தால் வேண்டப்படும் அல்லது அங்கீகரித்துள்ள சந்தர்பதை தவிர வருமானங்கள் மற்றும் செலவுகள் ஒன்றுடன் ஒன்றை பதிலீடு செய்யக் கூடாதெனினும் பல்கலைக்கழகத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த 578 நிதியங்களின் மொத்த வருமானம் ரூபா 807,612,337 தொகையில் ரூபா 829,459,858 ஆன செலவுகள் பதிலீடு செய்யப்பட்டு தேறிய பெறுமானம் நிதிச் செயலாற்றுகை கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது

**(ஆ) இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 65 ஆம் பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 652,890,045 ஆன நூலகப்புத்தகங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உரித்துறிமை மற்றும் நிலவுதலை உறுதிப்படுத்த முடியாத கண்டி மற்றும் குருனாகல மருத்துவமனைகளில் நிர்மாணங்களுக்காக 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,899,479 ஆன செலவினம் 2017 ஆண்டில் திசெம்பர் 31 திகதிக்கு பல்கலைக்கழகத்தின் சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 49 ஆம் பந்தி பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண வகை ஒன்று மீள்மதிப்பீடு செய்யும் போது அச் சொத்துக்கள் தொடர்பான ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுப்பு முழுவதும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கலை பீடத்தில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது ஆங்கில மொழி பிரிவு பயன்படித்திக் கொண்டிருந்த ரூபா 377,240 பெறுமதியான 04 கணனிகள் உள்ளடங்களாக 06 விடயங்களுக்கான சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு அன்பளிப்பு கணக்குகளின் மீதி கூட்டுத்தொகை ரூபா 4,690,558,085 ஆனதுடன் அவ் அன்பளிப்புகளிற்குறிய சொத்துக்கள் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதும் அன்பளிப்புக் கணக்கின் மீதி ஒழுங்குமுறை அடிப்படையொன்றின் கீழ் வருமானத்திற்கு இனங்காண கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,291,366 ஆன தொகையொன்று ‘‘அன்பளிப்பு நிதியத்தின்’’ கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மூலதன கருத்திட்டங்களுக்காக பெறப்பட்ட ஒதுக்கீட்டு தொகையை விஞ்சி பல்கலைக்கழக நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 308,669,345 ஆன செலவிடப்படாத மூலதன மானியங்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதன் காரணமாக அக் கணக்கின் மீதி அப் பெறுமானத்தினால் குறைத்தும் மற்றும் செலவிடப்பட்ட மூலதன கணக்கின் மீதி சம அளவினால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(இ) 5 செலவின விடயங்களின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 258,744 ஆன செலவு மீதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அம் மீதிகளை இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை.

(ஈ) நிலையான வைப்பொன்றிற்குரிய வங்கிற்கு நேரடியாக செலவாகியிருந்த ரூபா 371,290 ஆன வட்டி கணக்கிடப்பட்டிருக்கவில்லை

(உ) கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் முதலீட்டு வருமானம் ரூபா 110,112,139 ஆனதுடன், நிதிச் செயலாற்றுகை கூற்றில் அது ரூபா 109,827,896 ஆக குறிப்பிடப்பட்டமையால் அவ் வருமானம் ரூபா 284,243 இனால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு 04 நிர்மாண கருத்திட்டங்கள் தொடர்பாக இடைகால கொடுப்பனவு விலைபட்டியல்களின் மூலம் கழிக்கப்பட்டிருந்த ரூபா 6,282,494 ஆன முற்பணம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 திசெம்பர் 31 திகதிக்கு ஊழியர் கடன் சீராக்கல் கணக்கின் வரவு மீதியாக ரூபா 45,399 யினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதும் அம் மீதியை இனங்கண்டு சரி செய்வதற்கு 03 வருடக்காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் 2017 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 18,366,000 ஆன குத்தகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பெறப்பட வேண்டியதாகவும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் கடன் பதிவேடு பிரகாரம் இடர் கடன் மீதி ரூபா 1,020,003 ஆனதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,459,900 ஆனமையால் ரூபா 439,897 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவைகள் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வழங்கள் சேவைகள் மற்றும் நானாவித முற்பண மீதிகள் | 270,722 | மீதி உறுதிச் சான்று அல்லது முற்பண பதிவேடு. |
| (ஆ) | கடன்பட்டோர் மீதிகள் | 3,552,329 | மீதி உறுதிச் சான்றுகள் அல்லது கடன்பட்டோர் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (இ) | களஞ்சியம் | 3,509,033 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை. |
| (ஈ) | பல்கலைக்கழகத்துடன் இணைந்த 07 நிலையங்களிற்கான செலவினம் | 103,375,169 | முன்னேற்ற அறிக்கை. |
| (உ) | பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 39,082,787 | கிரய மதிப்பீடுகள் |
| | | 149,790,040 | |

(ஊ) 2016 ஆண்டின் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது கிரயம் ரூபா 228,844,650 ஆன 27 லெஜர் பேரேட்டு கணக்குகளில் நிலவிய சொத்துக்கள் மீதி மீள்மதிப்பீடு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதும் மீள்மதிப்பீடு பெறுமானங்கள் மீண்டும் அக்கணக்குகளில் காட்டப்படாமல் வேறு சொத்துக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டதன் காரணத்தால் அச் சொத்துக்களின் சரியான பெறுமதிகளை கணக்காய்வின் போது உறுதிப்படித்திக்கொள்ள முடியாமல் இருந்தன.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள கல்விசார் பதவியணியினரின் விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்துடன் கைச்சாதிட்ட உடன்படிக்கைகள் மீறப்பட்ட காரணத்தால் 2017 திசெம்பர் 31 திகதிக்கு 127 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 91,020,204 அறவிடப்பட வேண்டி இருந்தது. மேலும், கணக்காய்வு மாதிரி பரிசீலனை பிரகாரம் வெளிநாட்டு கற்கை விடுமுறை முடிவடைந்து 02 ஆண்டுகள் விஞ்சியிருந்த போதிலும் மீண்டும் சேவைக்கு சமூகமளிக்காத 03 விரிவுரையாளர்களுக்குறிய பிணை முறி பெறுமானங்களான ரூபா 22,746,557 ஆன தொகை 2017 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டியதாக இனங்கண்டு உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களின் பட்டியலிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதிக்கு 07 வழங்குனர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 27,069,573 தொகையை ஓராண்டிற்கும் அதிக காலமா தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆளணியின் 11 நபர்களினால் பெற்றுக்கொள்ளாத சம்பளம் மற்றும் படிகள் ரூபா 1,295,973 யினை 2017 திசெம்பர் 31 திகதிக்கு 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரை காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்தின் 09 பீடங்களுக்கு உரிய மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,886,950 ஆன சாலை கட்டனம் மற்றும் ரூபா 5,519,602 ஆன தண்டக்கட்டணமாக கூட்டுத்தொகை ரூபா 7,406,552 ஆன தொகை 2017 திசெம்பர் 31 திகதிக்கு 02 வருடங்கள் முதல் 36 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 31 திகதிக்கு வழங்கல், சேவைகள் மற்றும் சம்பள முற்பணமாக வழங்கப்பட்டிருந்த 22 மீதிகளுக்குறிய ரூபா 2,130,641 ஆன தொகை 01 ஆண்டு முதல் 16 ஆண்டுக்காலம் கடந்திருந்த போதிலும், தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்ப்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 189 | பல்கலைக்கழகத்தின் 2 வங்கி கணக்குகளில் வைப்பு செய்யப்பட்ட போதும் 06 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரை மாற்றப்படாமல் நிலவிய ரூபா 178,343 பெறுமதியான 25 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571(இ) | 2 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலமாக தீர்க்கப்படாத ரூபா 3,943,797 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட 14 மீதிகளின் பணம் நிதிப்பிமாணத்தின் பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 770 | - 2016 திசெம்பர் 31 திகதியில் மேற்கொள்ளப்பட்ட பண்டகக் கணிப்பீட்டில் அழிக்கப்பட வேண்டிய மற்றும் பழுதுபார்த்து பயன்படுத்தப்பட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 1,714,283 பெறுமதியான 38 விடயங்கள் மற்றும் கிரயத்தினை இனங்காண முடியாத 39 விடயங்களிற்கு உரிய பொருட்கள் தொடர்பாக 18 மாத காலம் கடந்திருந்த போதும் நிதிப்பிமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ் /BOARD OF SERVEY/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | - 2016 திசெம்பர் 31 இன் பண்டகக் கணிப்பீட்டின் பின் பராதீனம் செய்வதற்கு விதிந்துறைக்கப்பட்டிருந்த பல்வேறு விடயங்களுக்குறிய ரூபா 16,355,290 பெறுமதியான 340 விடயங்கள் மற்றும் கிரயத்தினை இனங்காண முடியாத 337 விடயங்கள் தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 79 | மாதிரி பரிசோதனையின் போது சுற்றறிக்கைக்கு இணங்கா பிரகாரம் ரூபா 10 முதல் ரூபா 1,000 வரை 99 நிலையான சொத்து விடயங்களை இனங்கண்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கள் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்க 2016 ஆண்டில் ஏற்பட்ட பிழைகளை பின்னோக்கிய ரீதியில் திருத்தியமையினால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் குறிப்பிடப்பட்ட 2016 ஆண்டின் பற்றாக்குறை ரூபா 113,459,245 யினால் அதிகரித்தலொன்றும், மொத்த பொறுப்பு ரூபா 21,945,236 யினால் அதிகரித்தலொன்றும், உரிமை ரூபா 284,881,302 யினால் அதிகரித்தலொன்றும், குறிப்பிட்டிருந்த போதிலும், அவற்றை திருத்துவதற்கு பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் மேலதிக பணம், நிதி அமைச்சரின் முன்கூட்டிய அனுமதி மீது நிலையான வைப்பு, திறைசேரி உண்டியல், குருங்கால வைப்புக்கள் அல்லது வேறு பயனுள்ள முதலீட்டில் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டின் நிலையான வைப்புகளில் முதலீடு செய்த ரூபா 95,500,000 தொகைக்காக அதன் பிரகாரம் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 662,292,910 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 190,389,026 ஆனதால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நிதி விளைவில் ரூபா 471,903,884 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் வருமானம் ரூபா 50,995,404 யினால் அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம் ரூபா 254,361,495 யினால் மற்றும் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 248,875,901 யினால் அதிகரித்தமை மேற் குறித்த நிதி விளைவில் பற்றாக்குறை அதிகரித்தலுக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டை தவிர ஏனைய ஆண்டுகளில் பற்றாக்குறைவொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2013 ஆண்டின் போது ரூபா 655,872,586 ஆன அது 2016 ஆண்டின் போது 662,292,910 வரை அதிகரித்திருந்தது. எவ்வாராயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை செம்மையாக்குகையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,212,155,421 ஆன பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 4,135,808,262 ஆக இருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான விஞ்ஞான பீடத்தின் 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலத்தினுள் பட்டதாரி சேவை உத்தியோகம் 64 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை வீச்சளவானது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் 2017 ஆண்டு செயலாற்றுகை திட்டம் பிரகாரம், கலை பீடம் மற்றும் விஞ்ஞான பீடத்தின் கீழ் செயற்படும் 27 கல்வி திணைக்களங்களை சர்வதேசத் தர நிலையினை அடைய வகையில் பட்டதாரி எதிர்பார்க்கை பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்துடன் இணைந்த விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ரூபா 74,663,524 ஆன நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பாக 2017 ஜுன் 20 ஆம் திகதி மற்றும் 2017 ஜுலை 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஐயவினாகள் தொடர்பாக 2017 ஜுன் 30 ஆம் திகதிய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளரின் இலக்க எச்ஈ/எப்ஜஎன்/12/06/பீடீஎன் கொண்ட கடிதத்தினூடாக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விஞ்ஞான பீடத்தில் 14 இடங்களில் பொறுத்தப்பட்டிருந்த தீ அனைக்கும் உபகரணங்களின் காலாவதியாகும் திகதி கணக்காய்வு திகதியான 2018 பெப்ரவரி 10 அன்று 10 வருட காலங்களை விஞ்சியிருந்த போதிலும் அதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவரின் தனிப்பட்ட பேர்வழிக் கோவை பரிசீலனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சுகாதார அமைச்சின் கீழ் வைத்தியராக பணிபுரிந்த இவ் வைத்தியர் 2004 பெப்ரவரி 16 ஆம் திகதி சுகாதார சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2004 சனவரி 01 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் சேவைக்கு அறிக்கையிட்டிருந்த போதிலும் நியமனத் திகதியை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகத்திற்கான தாபன விதிக் கோவையின் 111 பிரிவின் 21 ஆவது பந்திக்கு இணங்காத வகையில் 2010 செப்தெம்பர் 25 இடம்பெற்ற 390 ஆவது கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் 03 ஆண்டுகளுக்காக ஒரே முறையில் அவ் உத்தியோகத்தரின் தகுதிகான் காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

(iii) நியமன கடிதம் பிரகாரம் 06 மாதங்களினுள் பிறப்பு சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ்களின் மூல பிரதிகளுடன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், இவ் அறிக்கையின் திகதி வரை 14 ஆண்டு காலம் கடந்திருந்த போது அச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாததுடன் பல்கலைக்கழகமும் அதனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) இவ் விரிவுரையாளர் ரூபா 3,805,782 ஆன பிணை முறி மீது 2006 ஏப்ரல் 05 திகதி முதல் 2009 ஜுன் 04 வரை 39 மாதங்களுக்காக ஐக்கிய அமைரிகாவில் MRC Psych பரீட்சைக்கான மருத்துவ பயிற்சிக்காக ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்ததுடன், குறித்த தேவைபாடுகள் பூரணப்படுத்தப்படாமல் இருக்கையில் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் பல்கலைக்கழகத்தினால் எடுக்கப்படவில்லை. எனினும் அவர் மூலம் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட

வேண்டுகோளிற்கு இணங்க அவுஸ்திரேலியாவின் மெல்பன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கு தேவையான நடைமுறை பயிற்சிக்காக குறித்த ஒப்பந்தத்தை 03 மாதங்கள் 09 நாட்கள் காலமொன்றால் நீடிக்க பலகலைக்கழக கட்டுப்பாட்டு சபை 2008 ஒக்தோபர் 10 திகதி நடவடிக்கை எடுத்திருந்தது.

(v) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் இலக்கம் 01/2010 மற்றும் 2010 திசெம்பர் 10 திகதிய வியாபார வரிகள் மற்றும் முதலீட்டு கொள்கைகள் சுற்றறிக்கையின் 01 (சீ) பிரிவின் பிரகாரம் அரச பல்கலைக்கழகங்களின் கல்விசார் ஆளணியின் 12 ஆண்டு கால தொடர்ச்சியான சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள குறித்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்காக வரிச் சலுகையுடன் மோட்டார் வண்டி இறுக்குமதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள உரிமை இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அதற்கு இணங்காத வகையில் 2011 ஜுலை 05 திகதிக்கு 07 ஆண்டுகளை மாத்திரம் பூர்த்தி செய்திருக்கையில் இப் பெண் வைத்தியருக்கு மோட்டார் வண்டி அனுமதிப்பதிதிரம் வழங்கப்பட்டிருந்தது.

## 4.3 நோக்கங்களுக்கு முரணான கொடுப்பனவுகள்

பல்கலைக்கழகத்தினால் சுகாதார அமைச்சுக்குரிய கண்டி மற்றும் குருணாகல் பெறிய வைத்தியசாலைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 7,421,683 யினை பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்கு மற்றும் செயற்பாடுகளுக்கு முரணாக செலவிடப்படடிருந்தது.

## 4.4 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2015 திசெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பட்டதாரி கல்வி பாடநெறி மீளாய்வு தொடர்பான கைநூலின் 7 ஆவது தீர்மான தேர்வு முறைகளுக்கு அமைய பரீட்சை திட்டமிடல் ,வினாதாழ் தயாரித்தல், அவற்றை மேம்படுத்தல், சரிபிழை பார்த்தல், தரப்படுத்தல் மற்றும் மீளாய்தல் தொடர்பாக பின்பற்றப்படும் நிமித்த முறைமையொன்றை தயார் செய்வது பல்கலைக்கழக கட்டுப்பாட்டு சபையின் முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டியதுடன் அதனை பல்கலைக்கழக கல்விசார் ஆளணி மற்றும் மாணவ சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதும், கலை பீடம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மாணவ செயற்பாடுகளை மதிப்பிடும் முறைமையின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை பேனுவதற்கென விடை பத்திரத்தை மதிப்பீடு செய்வதற்காக நிறுவகத்திற்கு வெளியிலுள்ள தேர்ச்சியாளர்களை பயன்படுத்தல் அல்லது/மற்றும் விடைப் பத்திரத்தை இரண்டாம் முறை சரி பிழை பார்க்கும் முறைமை ஒன்றை அறிமுகம் செய்ய வேண்டிய போதும், கலை பீடத்தின் கீழ் செயற்படும் அனைத்து கல்விசார் பிரிவுகளினாலும் வெளித்தரப்பு தேர்ச்சியாளர்களின் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் பொருளியல் விஞ்ஞானம், சட்டம், சமூக விஞ்ஞானம், தொல்பொருல் விஞ்ஞானம் போன்ற கல்விசார் பிரிவுகளினால் விடைப்பத்திரத்தை இரண்டாம் முறை மதிப்பீடு செய்ததற்கான போதியளவான சான்றுகளை கணக்காய்வின் போது வெளிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(இ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட கைநூலின் பிரகாரம், மாணவ மதிப்பீட்டு முறைமைக்காக தொடர்ப்புபடும் கல்விசார் ஆளணியினர் அப் பொறுப்பை ஏற்பதற்கான தேர்ச்சியாளர்கள் என உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதும், மாதிரி பரிசீலிப்புகளின் போது வெளிப்பட்டதன் படி 03 பிரிவுகளில் சேவையிலுள்ள தற்கால கல்விசார் ஆளணியினால் வினாத்தாழ் தயாரித்தல், மேம்படுத்தல், விடைத்தாழ் சரிபிழை பார்த்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டள்ளதாக அவதானிக்கப்பட்டது. எவ்வாராயினும், அவ் விரிவுரையாளர்கள் கணக்காய்வு திகதியான 2018 செப்தெம்பர் 04 திகதி அன்று சேவையிலிருந்து விலகிச் சென்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருத்துவ பீடத்தின் மருத்துவ விஞ்ஞான திணைக்களம் ரூபா 7,595,150 பணத்திற்கு 2015 ஆகஸ்ட் 20 திகதி கொள்வனவு செய்திருந்த Urodynamic System with Accessories எனும் உபகரணத்தினால் 2017 பெப்ரவாரி 10 ஆம் திகதி வரை 07 நோயாளர்களை பரிசோதிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒர் நோயாளியிடமிருந்து ரூபா 12,000 பணம் பல்கலைக்கழகத்தினால் அரவிடப்படுவது வெளிப்படுத்தப்பட்டதுடன், ரூபா 7,595,150 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இவ் உபகரணம் 02 ஆண்டுகளுக்கு விஞ்சிய காலம் பாவனையற்று நிலவியமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) விஞ்ஞான பீடத்தில் இரசாயன விஞ்ஞான பிரிவிற்கு ஜப்பானினால் 2000 ஆண்டில் அன்பளிப்பு செய்யப்பட்ட JASCO FTIR Spectro Photometet உபகரணம் 2006 ஆண்டில் அலுவலகத்தில் காற்றுப் பதனாக்கி முறைமை செயலிழந்தமை காரணமாக பாவனைக்கு எடுக்க முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்ததுடன், அதனை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 12 வருடங்களாக செயலற்று நிலவியது. மேலும் அவ் உபகரணம் பொருட் பதிவேட்டில் பதியப்படாமை அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தினுள் மாணவ செயல்முறை பயிற்சி மற்றும் வாகனங்கள் பழுதுபார்ப்பதற்காக காணப்பட்ட வாகனங்கள் பராமரிப்பு அலகு 2017 பெப்ரவரி 17 ஆம் திகதி இரத்து செய்யப்பட்டு, அதற்கு இணைக்கப்பட்டிருந்த 06 ஊழியர்கள் கடமை கையழிப்பு இல்லாமல் பல்வேறு பீடங்களுக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் வேலை பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 511,953 பெறுமதியான அதன் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் 10 மாத காலமாக பயனற்றதாக நிலவியது.

(ஈ) நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2016 செப்தெம்பர் 18 முதல் 2018 பெப்ரவரி 18 திகதி வரையான காலத்தினுள் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 875,752,824 பெறுமதியான 04 மாணவ விடுதிகள் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாததனால் 2018 செப்தெம்பர் 10 வரையும் அவ் விடுதிகளை மாணவர்களின் பயன்பாட்டிற்காக பெற்றுக்கொடுக்க முடியாமல் இருந்தன.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1980 இலக்கம் 46 கொண்ட ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகார சட்டத்திற்கு இணங்காது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட 2006 ஜனவரி 11 திகதிய இலக்கம் 871 சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு கணிப்பிடுகையில் வாழ்கை செலவுப் படியை தொடர்புபடுத்திக் கொள்ளாததனால் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 3,136,592 மேலதிக கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தில் கட்டிடமொன்றை நிர்மாணிக்க மற்றும் முகாமை பீடத்தில் கோபுரம் நிர்மாணிக்க முறையே 2011 திசெம்பர் 15 திகதி மற்றும் 2016 திசெம்பர் 22 திகதி கூட்டுத்தொகை ரூபா 2,387,929 ஆன ஆயத்த முற்பணம் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2015 ஜுன் 04 திகதியளவில் சுகாதார பீட நிர்மாணம் கைவிடப்பட்டிருந்ததுடன் முகாமைப் பீட கோபுர நிர்மாணம் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் ஒப்பந்தங்களுக்காக பெறப்பட்ட முற்பணக்காப்பு காலாவதியாக முன்னர் பணமாக்கப்படாததன் காரணமாக அப்பெறுமானத்தால் பல்கலைக்கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் பீஈடீ/12 இலக்கம் மற்றும் 2003 ஜுன் 02 திகதிய சுற்றறிக்கையின் 9.10 பிரிவின் பிரகாரம் நிபுணத்துவ அறிவுடைய நபர்களின் பற்றாக்குறை காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடினமான சந்தர்ப்பங்களை தவிர அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் ஏற்படும் வெற்றிடங்களை கூடிய விரைவில் நிரப்ப அல்லது இரத்துச் செய்யவேண்டிய போதும், பல்கலைக்கழகத்தின் அங்கீகார ஆளணியில் நிலவும் நிபுணத்துவ வகையினுள் அடங்காத 249 வெற்றிடங்களை நிரப்பவோ இரத்துச்செய்யவோ நடவடிக்கை எடுக்காமல் வெற்றிடமாக தொடர்ந்தும் நிலவியது.

(ஆ) பல்கலைகழகத்தின் அங்கீகார ஆளணியில் 03 பதவிகளுக்காக நிரந்தர நியமனம் வழங்காது ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 9.10 பந்தியிற்கு இணங்காது, 1990 முதல் 2017 ஆண்டு வரையான காலத்தினுள் ஒப்பந்த அடிப்படையில் 14 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 திகதி வரை படிகளாக மாதத்திற்கு ரூபா 16,000 முதல் ரூபா 175,000 வரை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சரவை செயலாளரின் இலக்கம் அமப/15/1528/713/010 மற்றும் 2015 திசெம்பர் 03 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் 11 பந்திக்கு இணங்காது பல்கலைக்கழக நிரந்தர ஆளணியிற்கு 24 பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, 2016 ஒக்தோபர் முதல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 5,519,589 மற்றும் பல்வேறு நிதியங்களுக்கு ரூபா 704,226 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் குறித்த அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காது அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கையை 82 முதல் 114 வரை அதிகரிக்க சம்பளங்கள் மற்றும் ஊழியர்கள் ஆணைக்குழுவின் இலக்க டீஎம்எஸ்/0011/பீடீஎன் மற்றும் 2017 மே 18 திகதிய கடிதத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 திகதிய இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரல்’’ தொடர்பாக பல்கலைக்கழகம் அறிந்திருந்த போதும் தனது செயற் பரப்பிற்குட்படும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் மற்றும் அவ் இலக்குகளை அடைந்து கொள்ளும் முறைகள் மேலும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

#### 6.1.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** பெறுகை செயற்பாட்டை துரிதமாக, காலத்திற்கேற்ப மற்றும் உச்ச பொருளாதார நன்மை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன், பெறுகைத் திட்டம் வருட ஆரம்பத்திலே தயாரித்து அதற்கான அங்கீகாரத்தை பெற்று அதன் பிரகாரம் செயற்பட வேண்டிய போதும், பல்கலைக்கழகத்தினால் 2017 ஆண்டுக்காக தயாரிக்கப்ட்டிருந்த பெறுகை திட்டத்திற்கான கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன், 2017 ஜுலை 19 திகதி திருத்தப்பட்டிருந்த பெறுகை திட்டத்திற்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் 2017 ஆகஸ்ட் 29 ஆம் திகதி பெறப்பட்டிருந்தது.

**(ஆ)** 2017 ஆண்டுக்காக தயாரிக்கப்ட்டிருந்த பெறுகை திட்டம் பெறுகை வழிகாட்டி கோவையின் 4.2.1 பிரிவில் குறிப்பிட்ட மாதிரி பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக முதன்மை ஒழுங்கில் மற்றும் உரிய காலத்தினுள் பெறுகை செயற்பாடு செயற்பட்டிருந்ததா என பரிசோதிப்பதற்கு இயலாமல் இருந்தது.

**(இ)** 2017 பாதீட்டு பிரகாரம் 04 பிரிவுகளுக்காக ரூபா 1,170,000,000 ஆன தொகை ஏற்பாடு செய்திருந்த போதிலும் பெறுகை திட்டத்தின் பிரகாரம் அந்த 04 பிரிவுகளுக்காக ரூபா 7,544,150,000 ஆன மதிப்பீட்டு கிரயம் உள்ளடங்கப்பட்டிருந்த காரணத்தால் பெறுகை திட்டம் பாதீட்டுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

#### 6.1.2 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** கலை பீட மணவர்களுக்காக பொது அறையொன்று நிர்மாணிப்பது தொடர்பான பிரசீலனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஆண்டில் நீதிமன்ற ஆணையின் பிரகாரம் மேலதிக மணவர் தொகையினை சேர்த்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணமாக மணவர்களுக்காக பொது அறையொன்றை நிர்மாணிப்பதற்கு பதிலாக ரூபா 10,895,120 செலவில் இருக்கின்ற அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதும், குறித்த மணவர்களின் கற்கை நடவடிக்கைகளை முடிவு செய்து இரண்டு ஆண்டு காலங்கள் விஞ்சும் வரை இக்கட்டிடத்தின் நிர்மாண பணிகளை பூர்தி செய்ய பல்கலைக்கழகத்திற்கு முடியாமலிருந்தது.

(ii) 2006 பெறுகை வழிகாட்டி கோவையின் 7.9.1 பிரிவிற்கு இணங்க பெறப்பட்டிருந்த விலை மனு விபரமாக மதிப்பிடாமை காரணமாக பொறியியல் மதிப்பீட்டின் 16 விடயங்கள் 100 சதவீதம் முதல் 900 சதவீதம் வரையான விலகல்கள் நிலவிய போதும், அது தொடர்பாக கவனத்தை செலுத்தாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) உற்பத்தி பொறியியலாளர் பிரிவின் தீபற்றிய இரசாயன கட்டிடத்தை நவீனமயமாக்கலிற்காக ரூபா 13,622,900 ஆன ஒப்பந்தத்திற்கான மதிப்பீட்டின் 03 விடயங்களின் பரிசீலனையின் போது நிர்மாண வேலை அபிவிருத்தி நிருவகத்தின் நியம விபரக்குறிப்பு பயன்படுத்தப்படாததனால் ரூபா 145,535 ஆன தொகையும் மத்திய மாகாண சபையின் அங்கீகார விலை விகிதங்கள் (BSR) பயன்படுத்தப்படாததனால் ரூபா 251,763 ஆன தொகையும் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்நிர்மாணம் தொடர்பான ஒப்பந்த அளவுப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,264,125 பெறுமதியான 20 விடயங்கள் பல்வேறு காரணங்களால் அகற்றப்பட்டிருந்தன.

### 6.1.3 தாமதமாகிய கருத்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டினை பின்பற்றி முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பு கருத்திட்டங்களை திட்மிட்டு கூடிய மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படாமை காரணமாக 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலத்தினுள் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 244,891,745 பெறுமதியான 37 புனரமைப்பு கருத்திட்டங்களின் ஒப்பந்தக்காலம் 2017 திசெம்பர் 31 திகதியன்று முடிவடைந்திருந்த போதும் வேலைகள் பூர்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 33,800,832 பெறுமதியான 11 புனரமைப்பு கருத்திட்டங்களின் வேலைகள் 2017 திசெம்பர் 31 திகதி வரையிலும் ஆரம்பிக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்தினுள் வேலை பூர்த்தி செய்து பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்க வெண்டிய திகதியை விஞ்சியிருந்த பெறுமதி ரூபா 2,464,881,408 ஆன 09 புதிய நிர்மாண கருத்திட்ங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 திசெம்பர் 31 திகதியன்றும் பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆண்டில் திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 86,000,000 ஆன 05 நிர்மாண கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டிருந்த போதும் பல்கலைக்கழகத்தினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.1.3 பந்தி பிரகாரம், கட்டுப்பாட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட திருத்திய பாதீடு குறித்த ஆண்டு ஆரம்பிக்க 15 நாட்களுக்கு முன்பு பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி, தொடர்புடைய அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், 2017 ஆண்டின் திருத்திய பாதீடிக்கான கட்டுப்பாடுச் சபையின் அனுமதி 2018 மே 03 ஆம் திகதியே பெறப்பட்டிருந்தது.

## 6.3 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பல்கலைக்கழகத்தினால் 03 பீடங்களை நடாத்திச்செல்லும் 73 ஏக்கர் மற்றும் 53.4 பர்சஸ் ஆன காணியை முறையாக பல்கலைக்கழகத்திற்கு சுவீகரித்துக் கொண்டு அவற்றின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) கையொப்ப பதிவேடொன்றிலோ அல்லது விரல் அடையாள இயந்திர வரவு மற்றும் வெளிச்செல்லல் குறிப்பிடல் ஊடாக சேவையில் ஈடுபட்டுள்ளமை உரிதிப்படுத்தப்படாமல் 2017 ஆண்டில் 849 அலுவலர்கள் மற்றும் விரிவுரையாலர்களுக்கு ரூபா 2,287,733,499 ஆன தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் கணிப்பிடும் போது கற்கை படியினை தொடர்புபடுத்தியமையால் 2017 ஆண்டில் பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 93,213,994 ஆனது.

## 6.4 சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

2018 பெப்ரவரி 01 திகதி 1534/18 ஆம் இலக்க அதி விஷேட வர்தமானியின் முதல் பகுதி பிரகாரம் கழிவுப் பொருட்கள் தூய்மைபடுத்தல் அல்லது எறிவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிபத்திரமொன்றை பெற்று அதற்குறிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதும், பல்கலைக்கழக விஞ்ஞான கூடங்களில் பாவனையின் பின் ஒதுக்கப்படும் இரசாயன பொருட்கள் மற்றும் துருப்பிடிக்காத பொருட்கள் பல்கலைக்கழக வளவில் தயாரிக்கப்பட்டுள்ள குழியொன்றிற்கு எறியப்பட்டிருந்தன. மேலும், பல்கலைக்கழக 3 விடுதிகளின் மலசலகூட தொகுதிகள் செயற்படாமை காரணமாக முறையற்ற விதத்தில் சூழலிற்கு விடப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | ஒரு சில இலங்கை பொது கணக்கீட்டு நியமங்களை சரியாக பின்பற்றாமை. |
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தீர்க்க நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | பெறுகைகள் | ஒரு சில பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்படாமை. |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| **(உ)** | ஒப்பந்த நிருவாகம் | ஒரு சில நிர்மாண நடவடிக்கைகள் உடன்படிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படாமை. |